Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 233

வெள்ளிக்கிழமை
18 ஜூலை 2025

ஆடி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50




# தையிட்டி விகாரை மீது விரைவில் சட்டநடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜூலை 18

காங்கேசன்துறை - தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதென வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 12



## விகாரைக்குள் புதிய கட்டுமானம்? காட்டிக்கொடுத்தது கிடங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

காங்கேசன்துறை - தையிட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையில் புதிய கட்டுமானம் ஒன்றுக்காக குழியொன்று (கிடங்கு)வெட்டப்பட்டிருப்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. 12

## ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி!

அறிவித்தார் ஆளுநர்

கொடிகாமம், ஜூலை 18

வடக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள சில தொழில்துறைக்கான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி கிடைத்துள்ளது. 11

## மூளையில் இரத்தக்கசிவு; குடும்பப்பெண் மரணம்

## ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு!

வவுனியாவில் சம்பவம்

விரிவுகள் பக்கம்:- 11

## செம்மணி உண்மையை அரசே வெளிப்படுத்து!

ஜோசப் ஸ்டாலின் ஆவேசம்

கொழும்பு, ஜூலை 18

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பான உண்மையை அரசாங்கம் பகிரங்கப்படுத்தவேண்டும். 11

## அமைச்சரும், மாவட்டச்செயலரும் விகாராதிபதியுடன் இரகசியச் சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 18

தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் தீர்வொன்றை எட்டும் வகையில் விகாராதிபதியுடன் திடீர் இரகசியச் சந்திப்பொன்றை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரும், யாழ்.மாவட்டச் செயலர் பிரதீபனும் நேற்று மேற்கொண்டுள்ளனர். 11




## புதைகுழிகளுக்கு நீதி: கொழும்பில் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 18

செம்மணி மனிதப்புதைகுழி உட்பட இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப்புதைகுழிகளுக்கு நீதி கோரி கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்று நடைபெற்றது. 11

## இரணைமடுக்குளத்தில் மீனவர் மூழ்கிப் பலி!

கிளிநொச்சி, ஜூலை 18

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தில் மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் நிலை தடுமாறி தவறிவீழ்ந்து உயிரிழந்துள்ளார். 11

## ரூ.42 கோடி வென்றவருக்கு காசோலை வழங்கிவைப்பு!

கொழும்பு, ஜூலை 18

இலங்கையில் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு வரலாற்றில் மிகப்பெரும் பரிசுத் தொகையை வென்றவருக்கு, அதற்கான காசோலை நேற்று வழங்கிவைக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 16 ஆம் திகதிய 'மெகா பவர்' சீட்டிழுப்பின்போது ரூ. 474,599,422 (47 கோடி 45 இலட்சத்து 99 ஆயிரத்து 422 ரூபா) பரிசுத்தொகையை ஒருவர் வென்றிருந்தார். அவருக்கே, தேசிய லொத்தர் சபையின் தலைமையகத்தில் நேற்று நடந்த நிகழ்வில் பரிசுக்காசோலை வழங்கிவைக்கப்பட்டது. (அ)



'தொண்டைத் தண்ணி வத்த கத்துகினமே தவிர உருப்படியா ஒண்டும் நடக்கிறேலை கண்டியளோ'

யாழ்.மாவட்டச் செயலர் தன்னிச்சைச் செயற்பாடு!

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் எம்.பி.க்கள் கூட்டுப்பாய்ச்சல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

'யாழ் .மாவட்டச் செயலாளர் தன்னிச்சையான செயற்பாடுகளை மேற்கொள்கின்றார். அவை தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் குவிந்தபடி உள்ளன' என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் 11

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு

## பிரத்தியேக பாதையூடாக சென்று வழிபட அனுமதி!

ஆடிப்பிறப்பன்று படைத்தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பிரத்தியேக பாதை ஒன்றின் ஊடாகச் சென்று வழிபாடுகளை மேற்கொள்ள இராணு 11

## மீண்டும் 'சந்திரன் பூங்கா'

கிளிநொச்சி, ஜூலை 18

கிளிநொச்சி நகரில் உள்ள பசுமைப்பூங்காவின் பெயரை மீளவும் 'சந்திரன் பூங்கா' என்று மாற்றுவதென கரைச்சிப் பிரதேசசபை தீர்மானித்துள்ளது.

கரைச்சிப் பிரதேசசபையின் இரண்டாவது சபை 11

## 'இதுதான் கடைசி!'

யாழ்ப்பாணம், ஜூலை 18

"ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களைக் குழப்பி தனிநபர்கள் 'படம் காட்டுகின்ற' கடைசிக் கூட்டம் இதுவாகவே இருக்கும்" என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் காட்டமாகத் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 17.07.2025 | திகதி 17.07.2025 | திகதி 17.07.2025 | திகதி 17.07.2025 | திகதி 17.07.2025 | திகதி 17.07.2025 | திகதி 17.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4135 | சீட்டிழுப்பு இலக்கம் 1202 | சீட்டிழுப்பு இலக்கம் 0161 | சீட்டிழுப்பு இலக்கம் 5893 | சீட்டிழுப்பு இலக்கம் 1923 | சீட்டிழுப்பு இலக்கம் 0468 | சீட்டிழுப்பு இலக்கம் 0009 |
| ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கினம் ரிஷபம் | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கினம் மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் 18 21 56 59 | வெற்றி இலக்கங்கள் 06 10 22 43 | வெற்றி இலக்கங்கள் 6 0 1 5 | வெற்றி இலக்கங்கள் 1 3 2 0 8 2 | வெற்றி இலக்கங்கள் 35 43 54 57 | வெற்றி இலக்கங்கள் 2 0 8 2 | வெற்றி இலக்கங்கள் 01 05 42 53 |
| விசேட எழுத்து E | | | | விசேட எழுத்து X | | |

# சுகாதார ஊழியர் சேவைக்கு விரைவில் புதிய நியமனங்கள்

*சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூலை 18**

**சுகாதார ஊழியர் சேவைக்காகப் புதிதாக ஆயிரத்து 990 நியமனங்களை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமாகாணத்தில் தாதியர்கள் அற்ற 33 பிரதேச மருத்துவ மனைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் சுமார் 3 ஆயிரத்து 147 தாதியர்களுக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டது. இன்னும் இரண்டு மாதங்களில் 290 தாதியர்களுக்கான நியமனங்களை வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண மருத்துவமனைகளில் காணப்படும் தாதியர் பற்றாக்குறையைக் கவனத்தில் கொண்டு அவர்களில் குறிப்பிடத்தக்க தாதியர்களை அந்தப் பகுதிகளில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் மார்ச் மாதம் தாதியர் பட்டப்படிப்பை நிறைவுசெய்ய உள்ள 875 பேர் சுகாதார சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர். தாதியர் சேவைக்கு 100 பேரில் 5 ஆண்கள் மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர். வடமாகாணத்தில் நிலவிவரும் தாதியர் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு எதிர்வரும் நாள்களில் ஆண் தாதியர்களை அதிகளவில் சுகாதாரசேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பாக பொதுச் சேவை ஆணைக் குழுவுடன் கலந்துரையாடவுள்ளோம்.

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அமைச்சர்களின் அர்த்தமற்ற செயற்பாடுகளை மாற்றி புதிதாக சுகாதார ஊழியர் சேவைக்காக ஆயிரத்து 990 நியமனங்கள் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. சுகாதார ஊழியர்களுக்கான பணியிட மாற்றம், வெற்றிடங்களை நிரப்பல், பதவி உயர்வு உள்ளிட்ட ஏனைய சவால்களுக்கும் தீர்வு வழங்கப்படும் - என்றார். (ஏ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 17.07.2025 | தினம் வியாழக்கிழமை | வெற்றி வாரம் 0601 |
| DLB | ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 3 7 1 5 2 1 |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி 17.07.2025 | தினம் வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2867 | ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கம் 08 10 16 37 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 17.07.2025 | தினம் வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கம் 09 34 57 59 | வெற்றி வாரம் 5028 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி 17.07.2025 | தினம் வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் 0727 | வெற்றி இலக்கம் 04 12 34 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 17.07.2025 | தினம் வியாழக்கிழமை | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் 03 26 27 28 | சீட்டிழுப்பு வாரம் 4579 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 17.07.2025 | தினம் வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து S | சுப்பர் இலக்கம் 26 | வெற்றி இலக்கம் 11 12 39 70 | வெற்றி வாரம் 2043 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 17.07.2025 | தினம் வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கம் 09 10 51 63 | வெற்றி வாரம் 2693 |

## கச்சதீவை வழங்குகின்ற பேச்சுக்கே இடமில்லை!

*வெளிவிவகார அமைச்சர் திட்டவட்டம்*

கொழும்பு, ஜூலை 18

கச்சதீவு இலங்கையுடையது. அது இலங்கையுடையதாகவே என்றும் இருக்கும். இந்த விடயத்தில் விவாதங்களுக்குக்கூட நாங்கள் தயாரில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தமிழகத்தில் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பித்துள்ளநிலையில், கச்சதீவு மீட்புத் தொடர்பில் பல்வேறு கருத்துகள் வெளியிடப்பட்டுவருகின்றன. இவ்வாறான பின்னணியிலேயே, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது. அதை நாம் விட்டுக்கொடுக்கமாட்டோம். தென்னிந்திய அரசியலில் இந்தத் தீவு அவர்களின் அரசியல் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தப்படுகிறது. அவர்கள் அந்த மக்களை உசுப்பி, பொய் கூறி, அரசியல் செய்வதற்கு கச்சதீவைப் பயன்படுத்துகிறார்கள்.**

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது என்று தெரிந்தும், அதை இந்தியாவால் பெறமுடியாது என்று தெரிந்தும் மக்களை ஏமாற்றுவதற்காக கச்சதீவை வைத்து விளையாடுகிறார்கள். சில நேரங்களில் புலிகளை வைத்து அரசியல் செய்வார்கள். சில நேரங்களில் கச்சதீவை வைத்து அரசியல் செய்வார்கள். அவர்கள் இலங்கையோடு தொடர்புபட்ட, நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயங்களைத்தான் கையில் எடுப்பர். கச்சதீவு இலங்கையுடையது. அது இலங்கையுடையதாகவே என்றும் இருக்கும் -என்றார். (ம-75)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஆடிக்கூழும் மோதகமும்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றபோது சிற்றுண்டி வேளையில் ஆடிக்கூழும் மோதகமும் பரிமாறப்பட்டுள்ளன. தமிழர் பாரம்பரிய நாளான ஆடிப்பிறப்பை முன்னிட்டே அவை பகிரப்பட்டன. (சு-26)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முறையான ஆசன ஒதுக்கீடில்லை!

*அர்ச்சுனா எம்.பி. குற்றச்சாட்டு*

**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முறையாக ஆசனம் ஒதுக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில், நேற்று நடைபெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏனைய மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆசனங்கள் மேடையில் ஒதுக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டுமே வேறு மாதிரியாக இடங்கள் ஒதுக்கப்படுகின்றன - என்றார்.

இதையடுத்து, ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் அமைச்சர் சந்திரசேகர், 'யாழ்ப்பாணத்தில் இதுவரைகாலமும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்ட நடைமுறையே இப்போதும் பின்பற்றப்படுகின்றது. அதனை மாற்றவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்தால் அதனை நடைமுறைப்படுத்தத் தயார்' - என்றார். (ம-26)

## வரலாறுகளை அழிக்கும் முயற்சியில் தே.ம.சக்தி!

*நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 18

வரலாற்றை அழித்தால் எதிர்காலத்தை இலகுவில் இல்லாது செய்துவிடலாம். இதுதான் மேற்குலகின் நிகழ்ச்சிநிரல். அதற்கமையவே தேசிய மக்கள் சக்தி செயற்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாம் எமது பாடசாலைக் காலத்தில் வரலாறு படித்தோம். ஆனால் தற்போதுள்ள மாணவர்களுக்கு வரலாறு கற்பிப்பது இந்த அரசாங்கத்துக்கு சிக்கலாக இருக்கும். ஏனெனில் ஜே.வி.பி.யின் வரலாறு சரியில்லை. வரலாற்றைக் கற்பித்தால்தும் கட்சியின் வரலாறும் தெரியவரும் என அஞ்சுகின்றனர்.

வரலாற்றை மறக்கடித்தால் எதிர்காலத்தை அழிப்பது இலகு. மேற்குலக நிகழ்ச்சிநிரல் இதுதான். தற்போதைய அரசாங்கமும் தமது தவறான வரலாற்றை மூடிமறைப்பதற்காக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு மறக்கவைக்க முற்படுகின்றதுபோல் தெரிகின்றது - என்றார். (ஏ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் பெருவெளியில்

# ஆயுததாரிகள் வெறியாட்டம்; 39 ஆவது ஆண்டு நினைவு



**திருகோணமலை, ஜூலை 18**

**மூதூர், பெரியவெளி மணற்சேனைக் கிராமத்தில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 1986ஆம் ஆண்டு நடந்த இந்தப் படுகொலைச் சம்பவத்தில் 44 பொதுமக்கள் துப்பாக்கியால் சுடப்பட்டும், வெட்டப்பட்டும், எரிக்கப்பட்டும் படுகொலை செய்யப்பட்டனர்.**

அந்த அகதிமுகாமில் பாரதிபுரம், மல்லிகைத்தீவு, மணச்சேனை, பெரியவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 75க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தஞ்சமடைந்திருந்தன. ஜூலை மாதம் 16ஆம் திகதி அதிகாலையில் மணற்சேனை, பெரியவெளி ஆகிய கிராமங்களில் இருந்த மக்கள் 300க்கும் மேற்பட்ட ஆயுததாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டுத் துப்பாக்கியால் சுடப்பட்டும், வெட்டப்பட்டும், எரிக்கப்பட்டும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் இரு பெண்கள் உட்பட 44 பேர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். கிராமத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் முதலில் வீடுகளில் தங்கியிருந்த 25 ஆண்கள் மற்றும் இரு பெண்களைக் கொன்றதுடன், அதன்பின்னர் பெரியவெளி அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த மக்களைச் சுற்றிவளைத்து அங்கிருந்த 17 ஆண்களை ஓரிடத்தில் முழந்தாழிடவைத்து குடும்பத்தினர் முன்னிலையில்சுட்டுக்கொலை செய்துள்ளனர். இந்தச் சடலங்கள் கட்டைப்பறிச்சானில் இருந்த ஜி.பி.எஸ். இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டன. (எ-இ)

**போதைப்பொருளுடன்**

## பெண் கைது

கொழும்பு, ஜூலை 18

கட்டுநாயக்க விமானநிலையத்தில், 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள குஷ் ரக போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

23 வயதுடைய டென்மார்க் பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு

## கே.கே.எஸ். - நாகபட்டினம் கப்பல்சேவையில் சலுகை

யாழ்ப்பாணம், ஜூலை 18

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான கப்பல் போக்குவரத்தில் விசேட சலுகைகள் வழங்கப்படவுள்ளன என்று சிவங்ககை கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜெயசீலன் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே கப்பல் வழியாக போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளுக்கு இருவழிக் கட்டணமாக 28 ஆயிரத்து 300 ரூபாவும், காங்கேசன்துறையில் இருந்து நாகபட்டினம் செல்வதற்கு ஒருவழிக் கட்டணமாக 12 ஆயிரத்து 300 ரூபாவும், நாகபட்டினத்தில் இருந்து காங்கேசன்துறை வருவதற்கு ஒருவழிக் கட்டணமாக 16 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படுகிறது. நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு விசேட சலுகைகள் வழங்கப்படவுள்ளன. அவை தொடர்பாக விரைவில் அறிவிப்போம். கப்பல் செவ்வாய்கிழமை தவிர்ந்த ஆறு நாள்களும் சேவையில் ஈடுபட்டுவருகின்றது. கப்பல் சேவையில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டால் அறிவிக்கப்படும் - என்றார். (எ-27)



கத்திமுனையில்

## சங்கிலி பறித்தோருக்கு இளைஞர்கள் தர்ம அடி

*முள்ளியவளையில் சம்பவம்*

முள்ளியவளை பொன்னகர் கிராமத்தில் வீதியால் சென்ற பெண்ணிடம் கத்தியைக் காட்டி சங்கிலியைப் பறித்துக்கொண்டு தப்பிச் செல்ல முற்பட்ட இருவரை பிரதேச இளைஞர்கள் மடக்கிப்பிடித்து தர்ம அடிகொடுத்து முள்ளியவளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. சந்தேகநபர்கள் பயணித்த மோட்டார்சைக்கிளையும் கைப்பற்றிய முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-35)

வவுனியா மாநகரசபை

## கடமையைப் பொறுப்பேற்றார் புதிய ஆணையாளர் வாகீசன்

வவுனியா, ஜூலை 18

வவுனியா மாநகரசபையின் புதிய ஆணையாளர் பொ.வாகீசன் நேற்றுத் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ளார்.

வவுனியா நகரசபையாக இருந்து மாநகரசபையாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில், அதன் ஆணையாளராக இதுவரை வவுனியாப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் செயற்பட்டிருந்தார். இந்தநிலையில் புதிய ஆணையாளராக வடமாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளராக இதுவரை கடமையாற்றிய பொ.வாகீசன் [illegible] கடமைகளை நேற்றுப் [illegible] (ஏ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பூனையின்ர கையில மணி

'படிக்கிறது தேவாரம், இடிக்கிறதோ சிவன் கோயில்' இப்பிடிப்பட்ட ஆக்கள்தான் கூடிப்போட்டினம். அதைவிட இப்ப என்னெண்டால் ஆரெல்லாம் கோயிலை இடிக்கினமோ அவையிட்டத்தான் தேவாரம் படிக்கிற பொறுப்பையும் குடுக்கினம். அப்பிடியொரு மாற்றம் எங்கட நாட்டில. இப்ப ஒருகிழமையா உந்தப் பிரமிட் திட்டத்தைப் பற்றின விழிப்புணர்வு இலங்கை முழுக்க நடக்குது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பொறுப்பா உள்ள 'ஜீ.ஏ.மார்' அந்தந்த மாவட்டங்களில இப்பிடி பிரமிட்டுக்கு எதிரான விழிப்புணர்வு வேலையளைச் செய்யினம். அப்பிடி வடக்கில இருக்கிற ஒரு ஜீ.ஏ.யிட்டையும் இந்த விழிப்புணர்வுப் பொறுப்பை அரசாங்கம் குடுத்திருக்கு. அதைப் பார்த்தவை எல்லாரும் 'பாலுக்குப் பூனையைக் காவல் வைச்சிருக்கினம்' எண்டு பேஸ்புக்கில நக்கலடிக்கத் தொடங்கியிருக்கினம். ஏன் அப்பிடி நக்கலடிக்கினம் எண்டு விசாரிச்சுப் பார்த்தால், வடக்கில் உந்தப் பிரமிட் திட்டத்தை இந்தளவு தூரம் பரப்பிறதில 'நம்பர் வண்' ஆளா இருக்கிறவர் இந்த ஜீ.ஏ. தானாம்.

அவர் பிரதேச செயலாளரா இருக்கேக்கையே இந்தப் பிரமிட் வலைக்குள்ள ஆக்களை விழுத்திற வேலையைத் தொடங்கிட்டார். அவருக்குச் சம்பளத்தைவிடவும் இந்தப் பிரமிட் ஏமாத்துவேலையால காசு கொட்டத் தொடங்கினதால, ஆள் இதிலையே முழுமூச்சா இறங்கிட்டார். தனக்குக் கீழ வேலை செய்யிறவை எல்லாரையும் இந்தத் திட்டத்துக்க சேர்த்திருக்கிறார். மேலதிகாரி சேரச்சொன்னால், மற்றவை சேரத்தானே வேணும். ஒரு கட்டத்தில பிரதேச செயலகத்துக்கு வாற சனத்தையும் இந்தப் பிரமிட் சதிவலைக்குள்ள இந்த அதிகாரி விழவைச்சார்.

பிரமிட் எண்டது சூரன்மாதிரி. ஒரு தலையை விழுத்தினால் வேற தலையோட சூரன் திரும்ப வாறமாதிரி, ஏதும் ஒரு திட்டத்தைக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடிச்சு நிப்பாட்டினால் வேற பேரோட, வேற பொருள்களோட இந்தத் திட்டம் வந்திடும். ஆனால் என்ன பேர் வைச்சாலும், மேல இருக்கிற ஆக்களுக்கு காசுபோக, கீழ உள்ளவையிட்ட இருக்கிற எல்லாத்தையும் பிடுங்கிறதுதான் இந்தத் திட்டத்தின்ர நோக்கம். இது மெத்தப்படிச்ச இந்த அதிகாரிக்கு நல்லாத் தெரியும். எண்டாலும் வாற காசை எதுக்கு விடுவான் எண்டு, எல்லாரிட்டையும் வறுகியிருக்கிறார். ஒருகட்டத்தில இவரால ஏமாத்துப்பட்டவை முறைப்பாடுகளும் செய்தவை. இந்த அதிகாரி 'அட்மினா' இருந்து பிரமிட் திட்டங்களுக்கு ஆக்களைச் சேர்த்த வட்ஸப் குரூப்புகளின்ர 'ஸ்கிரீன் ஷொட்' எல்லாம் குடுத்தும், வழக்கம் போல சம்பந்தப்பட்ட மேலதிகாரிமாரின்ர காலில விழுந்து அதையெல்லாம் மூடிமறைச்சு, இப்ப 'பெரிய' இடத்துக்கும் வந்திட்டார். பிரமிட்டின்ர பிதாமகரா இருந்து தட்டிச்சுத்தின இந்த அதிகாரி ஊழலில்லாத நாட்டைக் கொண்டுவருவம், மோசடியைத்தடுப்பம் எண்டு சொல்லிக்கொண்டு வந்த திசைகாட்டிக்காரருக்கே, தலையைச் சுத்திப்போட்டு, இப்பிடிப் பதவியைப் பிடிக்கத் தனிக்கெட்டித்தனம் வேணும். இப்ப அவரிட்டையே பிரமிட்டுக்கு எதிரா விழிப்புணர்வு செய்யச்சொல்லி பொறுப்பைக் குடுத்தால், பழக்கதோசத்தில இதைவைச்சு இன்னும் பிரமிட்டுக்கு ஆள் பிடிச்சாலும் பிடிச்சிடுவார். பூனைக்கு மணிகட்டச் சொன்னால், எங்கட அரசாங்கம் பூனையின்ர கையிலையே மணியைக் குடுத்து அழகு பாக்குது கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

மண்ணில் 09 . 01 . 1954



விண்ணில்

## சிவபாதம் தனலட்சுமி

### திதி-அட்டமி

ஆண்டவன் அடி சேர்ந்து ஆண்டு ஐந்து ஆயிற்று!
ஆனாலும் நாம் அழுகின்றோம் அம்மா அம்மாவென்று
கண்மணிகளாய் எமை ஆளாக்கி விட்டு காற்றோடு
போய்விட்டீர்களே அம்மா!
கண்களில் நிறைந்த நீருடனே - நாம் கலங்குகின்றோம்
அம்மா அம்மாவென்று பாசத்தோடும் பண்போடும் எமை
பாதுகாத்த எம் தாயே!
விண்ணிலே இருந்தாலும் என் சந்ததிக்கு ஒளி
விளக்காய் ஒளி தந்து வழி நடத்துங்கள் அம்மா! எத்தனை
ஆண்டுகள் கடந்தாலும்
எமது மனம் உங்களை தேடிக் கொண்டே இருக்கும்
அம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்...!

என்றும் நீங்காத நினைவுகளுடன் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

தகவல்:குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 03 . 1947



இறப்பு 14 . 07 . 2025

## சின்னத்தம்பி அருள்ராசலிங்கம்

யாழ் குப்பிளான் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அருள்ராசலிங்கம் அவர்கள் கடந்த (14.07.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-பறுவதம் தம்பதியின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற அம்பலவாணர்-பாரததேவி தம்பதியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ரேவதிதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சொர்ணம்மா, சொக்கலிங்கம் மற்றும் பத்மாவதி, ஞானலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற இராசையா மற்றும் இந்திராதேவி, அன்னலட்சுமி (குப்பிளான்), மணி (டென்மார்க்), சிங்கராசா (குப்பிளான்), ரூபன் (டென்மார்க்), ஜமுனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணன் (லண்டன்), சசி (டென்மார்க்), கரன் (லண்டன்), லோகன் (லண்டன்), ரோசா (சுவிஸ்), அமுதா (குப்பிளான்), புஸ்பா (கோண்டாவில்), லக்சன் (லண்டன்), மதிவதனன் (டென்மார்க்), மதியூரன்( டென்மார்க்) ஆகியோரின் சித்தப்பாவும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் வர்ணமலர், ராணி (கனடா), சிவா (கனடா), குணா (கனடா), ரதா (கனடா), வவா (சுகிர்தராஜா-திருநெல்வேலி), வினோ(குப்பிளான்), அனுசன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அரவிந்தின் (ஜேர்மனி) அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (18.07.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் தெற்கு காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 05 . 1950



மறைவு 17 . 07 . 2025

## வயித்திலிங்கம் கனகலிங்கம்

**(பிரபல வர்த்தகர் சாவகச்சேரி)**

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் கனகலிங்கம் அவர்கள் நேற்று (17.07.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்திலிங்கம் - நல்லம்மா தம்பதியின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - மீனாட்சி தம்பதியின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யசிந்தா மற்றும் அஜந்தா, பிரிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம் (சுமங்கலி புடவை மாளிகை), அவர்களின் பாசமிகு சகோதரனும், விஜயசிறீ, ஜெயந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜீவன், அகலியா, நிறோஜன், பதுஜன், திஷானி, ஜனு ஆகியோரின் பேரனும், லேயு, அமலியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 05 . 1936



மறைவு 16 . 07 . 2025

## கணபதிப்பிள்ளை இரத்தினம்

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினம் அவர்கள் கடந்த (16.07.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்ணம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் பாசமிகு கணவரும், கேதீஸ்வரன் (ஈசன் - ஜேர்மனி), கவிதா (ஆசிரியை - யா/ ஆனைப்பந்தி மெ.மி.வி), காலஞ்சென்றவர்களான கஜேந்திரன் (மாலன்), வனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜலஷ்சுமி (ஜேர்மனி), சிவகாந்தி (இணைப்பாளர் - செயற்பட்டு மகிழ்வோம்-யாழ் கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, நடராஜா, இராசதுரை, அன்னலட்சுமி, தங்கம்மா, பசுபதியம்மா ஆகியோரின் சகோதரனும், தனபாலசிங்கம் (சுவிஸ்), புவனேஸ்வரி (சுவிஸ்), லோகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நடராசா, பராசக்தி, ஆனந்தகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சயந்தினி, விஷாலினி, கனிசிகா, ரேஸ்மிகா, பிறின்சிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 51, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.**

தகவல் :
**குடும்பத்தினர்
021 222 7682, 077 704 0960**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

அதிக செலவும்
முட்டாள்தனமான சிக்கனமும்
தீமையே விளைவிக்கும்.
—ஹென்றி போர்ட்—

# சபைகளை அவமாக்காதீர்!

ஜனாதிபதித் தேர்தலாக இருக்கட்டும் நாடாளு மன்றத் தேர்தலாக இருக்கட்டும் மாகாணசபைத் தேர்தலாக இருக்கட்டும் உள்ளூராட்சிச்சபைத் தேர்தலாக இருக்கட்டும் எந்தத் தேர்தலாயினும் அவற்றில் வாக்களிக்கும் மக்கள் தமக்காகக் குரல்கொடுப்பதற்காக, தங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தங்களின் நெருக்கடிகளை வெளிப்படுத்துவதற்காகவே தமது பிரதிநிதியாக ஒருவரைத் தெரிந்தெடுக்க வாக்களிக்கின்றனர். தங்களின் வாக்குகள்மூலம் தெரிவு செய்யப்படுபவர் தமக்காகவும் தங்களின் பிரதேசத்துக்காகவும் குரல்கொடுப்பார் - முன்னேற்றத்துக்கு வழியேற்படுத்துவார் என்ற நப்பாசையிலேயே ஒவ்வொரு தேர்தல்களிலும் மக்கள் ஏமாற்றங்களை விழுங்கியவாறு வாக்களித்துவருகின்றனர்.

தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக எதையும் செய்யும் அரசியல்வாதிகள் தேர்தலின் பின்னர் தங்களின் மறுமுகத்தைக் காட்டுவதே வழக்கமாக இருக்கின்றது. தேர்தலில் வென்று பதவிகளைப் பிடித்தபின்னர் அவர்கள் மக்களுடனான இடைவெளியை அதிகரித்துக்கொண்டு, தங்களுக்கான அரசியலைச் செய்ய ஆரம்பித்துவிடுகின்றனர். அடுத்த தேர்தல்வரும்வரையில் கட்சி அரசியல், பதவிப்போட்டி என்று முட்டிமோதும் அரசியல்வாதிகள் தங்களைத் தெரிவுசெய்த மக்களைப் பற்றிச் சிறிதளவேனும் சிந்திப்பதில்லை. ஈற்றில் மக்களுக்கு எதுவும் நடக்காமலேயே - கிடைக்காமலேயே அவர்கள் தங்களின் பதவிக் காலங்களை முடித்துக்கொள்வார்கள். இது எந்த மாற்றமும் இன்றிப் பல்லாண்டு காலமாகவே நடந்துகொண்டிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் நடந்த யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வும் வாக்களித்த மக்கள் விரக்திகொள்ளும் அளவுக்கு நடந்திருக்கின்றது. காலை முதல் இரவுவரை நடந்த அமர்வு பட்டிமன்றம் போலவும், மீன்சந்தை போன்றும் இருந்ததேதவிர, நேற்றுமுன்தினம் நடந்த அமர்வால் மக்களுக்கு நன்மை கிட்டியதாகத் தெரியவில்லை. பல மணிநேரமாக நடந்த அமர்வில் மக்கள் பிரச்சினை சிலமணிநேரமே பேசப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவரும் பேச்சுப்போட்டிக்கு வந்தவர்கள் போன்று நீட்டி முழக்கிப் பேசிக்கொண்டனரே தவிர, ஆக்கபூர்வமானவையாக எதையும் சொல்லவில்லை. வெற்றுப்பேச்சுகளிலும், வீண்விவாதங்களிலும் தலையை நுழைத்து சபையின் பொன்னான நேரத்தை வீணடித்த உறுப்பினர்கள் பலரை முக்கியமான விவாதங்களின்போது சபையில் காணமுடியவில்லை.

மக்களால் தெரிவுசெய்யப்பட்டு பதவிகளில் இருத்தப்பட்டுள்ளவர்கள், தங்களுக்கான கடமைகளைச் சரியாக விளங்கிக்கொள்வது அவசியம். உரைகளை நிகழ்த்தவோ, ஒருவரை ஒருவர் மாறி மாறி அவதூறு செய்யவோ, கட்சி அரசியலைச் செய்யவோ மக்கள் எவரையும் தெரிவுசெய்வதில்லை. மக்கள் என்ன நோக்கத்துக்காக வாக்களித்தார்களோ அதைப் புரிந்துகொண்டு செயலாற்றுவது அவசியம். வாய்ப்பேச்சுகளை விடுத்து -செலவினங்களைக் குறைத்து மக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக முன்னெடுப்பது தொடர்பாக அரசியல்வாதிகள் சிந்திக்கவேண்டும். யாழ்ப்பாணம் மாநகரசபை மட்டுமல்ல, ஏனைய உள்ளூராட்சிசபைகளுக்கும் இது பொருந்தும். பிரதேசரீதியான அபிவிருத்திக்கு உள்ளூராட்சி சபைகளின் வினைத்திறனான இயக்கம் அவசியம். உள்ளூராட்சிசபைகள் வினைத்திறனாக இயங்க வேண்டுமானால் - அது சபைகளின் உறுப்பினர்கள் கைகளில்தான் இருக்கின்றது. எனவே உள்ளூராட்சி சபை அமர்வுகளின்போது திட்டமிட்டு, நேரத்தை விரயமாக்காது மக்களின் பிரச்சினைகளையும்,பிரதேச அபிவிருத்தியையும், ஊழல்களை இல்லாதொழிப்பதையும் மட்டுமே பேசுங்கள். சபை நேரத்தை உங்கள் சண்டைக்கள நேரமாக்காதீர்.




# இனப்படுகொலைக்கு நீதிகோரி தெற்கு மக்கள் அணிதிரளவேண்டும்!

## அருட்தந்தை மா. சக்திவேல் உருக்கம்

**கொழும்பு, ஜுலை 18**
**"வடக்கு, கிழக்கில் நடந்தது இனப்படுகொலையே. எனவே, வடக்கு மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு தெற்கு மக்களும் அணிதிரள வேண்டும்" - இவ்வாறு அரசியல், சிவில் சமூக செயற்பாட்டாளரான அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி கொழும்பில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் கூறியவை வருமாறு,
செம்மணியில் இதுவரை 60க்கும் மேற்பட்ட எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பச்சிளம் குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளனர். பச்சிளம் குழந்தைகள் புலிகளா? பயங்கரவாதிகளா? இந்நாட்டில் உள்ள இராணுவம் வடக்கு, கிழக்கில் இனப்படுகொலையில் ஈடுபட்டது. 1990களில் செம்மணியில் நடந்ததும் இனப்படுகொலைதான். 2009 இல் முள்ளிவாய்க்காலில் நடந்ததும் இனப்படுகொலைதான். இது தொடர்பில் நீதியை வழங்குவதற்கு தெற்கிலுள்ள மக்கள், வடக்கு மக்களுடன் இணையவேண்டும். நீதி வழங்குமாறு குரல் கொடுக்கவேண்டும். தெற்கிலுள்ள அரசுகள் நீதியை வழங்குமா என்பது சந்தேகமே. இதனை மூடி மறைக்கக்கூடும். ஏனெனில் இராணுவத்தினரைப் பாதுகாப்பதற்கே முற்படுவார்கள். இராணுவத்தினரை பாதுகாப்பதற்கே சந்திரிக்கா, புதைகுழியைத் தோண்டவில்லை. மஹிந்த, கோத்தாபய, ரணில் ஆகியோரும் அதே வழியில்தான் செயற்பட்டனர். இலங்கையில் இனப்படுகொலை நடந்துள்ளது என்பதை சர்வதேசம் ஏற்கவேண்டும். தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்" - என்றார். (அ-44)

# கூட்டம்

சாவகச்சேரிப் பிரதேசசபையின் நிதி கையாளல் தொடர்பான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-131)

# மாதிரிச் சந்தை

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாதிரிச் சந்தை இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பப்பிரிவு வளாகத்தில் அதிபர் க.உமாபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொடிகாமம் மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி பிரியகாந்தினி விசாகன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், கௌரவ விருந்தினராக உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திருமதி கோபிகா மதீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-159)

# சீருடைகளுக்கு சீனா நன்கொடை

கொழும்பு, ஜுலை 18
2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகளுக்குத் தேவையான 5,171 மில்லியன் ரூபா பெறுமதியான துணி முழுவதும் சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ச-இ)

# முல்லை. சின்னாற்றில் ஆணின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் உள்ள சின்னாற்றுக்குள் ஆணொருவரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்தவர்கள், அதுகுறித்து முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அதனையடுத்து அங்குவந்த பொலிஸார் சடலத்தைமீட்டு . முல்லைத்தீவு மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். செல்வபுரம் பகுதியினைச் சேர்ந்த 54 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-19)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை சனிக்கிழமை - ஆடி 03
19.07.2025
சுபநேரம் : 03.01 04.31
ராகுகாலம் : 09.01- 10.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். தந்தையின்வழியில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவிகேட்டுத் தொந்தரவு செய்வார்கள்.

**இடபம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். அக்கம்பக்கத்திலிருப்பவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** முக்கியமான முடிவு எடுப்பதற்கு முன்பு வாழ்க்கைத்துணையுடன் ஆலோசனை செய்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** பரபரப்பான நாளாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்களை எதிர்த்துப் பேசியவர்கள் பணிந்துவருவார்கள்.

**சிம்மம்:** பணிகளில்கூடுதல்கவனம்தேவைப்படும் நாள். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். சிலருக்குப் பிள்ளைகள்வகையில் சங்கடம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். நீண்டநாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கடன்களால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள் வார்கள். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்** : உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும்.

**தனுசு:** உறவினர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். புதிய முயற்சிகள் இழுபறியானாலும் முடிந்துவிடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குலதெய்வக் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கநேரிடும். கூடுமான வரை வெளியூர்ப்பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்துவிடவும்.

# யாழ். நகர்ப் பகுதியில் ஆடிப்பிறப்பு நிகழ்வு

## செம்மணியில் கொலையுண்ட சிறார்களுக்கும் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஜூலை 18
ஆடிப்பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வு யாழ். நகர் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாகவுள்ள தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் உருவச்சிலையடியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. சோமசுந்தர ஞானத் தமிழ்மன்றத்தின் தலைவர் கே.எஸ்.சிவஞானராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புலவரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதோடு ஆடிக்கூழ் காய்ச்சப்பட்டு வழங்கப்பட்டது. அத்துடன் புலவரினால் பாடப்பட்ட 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை' எனும் பாடலும் பாடப்பட்டது. தொடர்ந்து செம்மணி மனிதப்புதைகுழியில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட சிறார்கள் நினைவுகூரப்பட்டனர். (ச-17,66,27)

# செல்லப்பா சுவாமி குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ். நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு நல்லூர் வீதியில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் சுவாமிகளுக்கு அபிஷேகம் நடை பெற்றுக் காலை 9 மணிக்குத் திருமுறை நற்சிந்தனை ஓதலைத் தொடர்ந்து, பி.ப. 11மணிக்கு 'சித்தர் மகிமை'எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கிருபாசக்தி கருணா உரையாற்றவுள்ளார். (ச-25-66)

# ஒரு குடை: ஒரு கூதல் நூல் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 18
வயவை லம்போ எழுதிய, 'ஒரு குடை: ஒரு கூதல்' எனும் நூல் வெளியீடு, வயாவிளான் றோ.க.த.க. பாடசாலையில் நாளை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் த.றொபேட் அருட்சேகரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
நூல் அறிமுகவுரையை ஊரெழு கணேச வித்தியாசாலையின் அதிபர் இரா.ஜெயக்குமார், நூல் ஆய்வுரையை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் துரைராசா கோணேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ம)

# மன்றயாகம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் 7 ஆவது மன்றயாகம் இல156, ஜீ.பி.எஸ்.வீதி, கல்வியங்காட்டிலுள்ள மன்றத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்னதான நன்கொடைக்காக 071 856 5662, 077 914 6149, 077 740 8062 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. மாலை பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து இரவு 7 மணிக்குவசந்தமண்டபப் பூசை இடம்பெற்று நாகதம்பிரான் பிள்ளையார், முருகனுடன் எழுந்தருளி உள்வீதி, வெளிவீதி உலா வரும் காட்சி இடம்பெற்றது. (ச-41-100)



# மயிலிட்டி பேச்சியம்பாள் கொடியேற்றம் இன்று

மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 நாள்கள் இடம்பெறவுள்ளது.
மஹோற்சவத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை சாந்தி பூசை வழிபாடுகள் இடம்பெற்றநிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 28ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தமும் அன்றைய தினம் மாலை 6மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (ச-41-100)

# சோமசுந்தரப்புலவர் குருபூஜை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 18
சைவவாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பாலதிருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்-4, மாதந்தோறும் நடைபெறும் 'ஈழத்துச் சமயப் பெரியார்கள்' குருபூஜை விழாவும், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் குருபூஜை விழா ஆகியன சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளன.
சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருவாளர் சமூகமாமணி கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
நவாலியூர் சோமசுந்தரப்புலவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்கபூஷணம செ. த. குமரனின் "நவாலியூர் சோமசுந்தரப்புலவர் வாக்கும் வாழ்வும்" எனும் விடயப் பொருளில் சொற்பொழிவும், ஆன்மீக விருந்தினர் உரையும், இளஞ் சைவப்புலவர், பிரசங்கச்சுடர் க. கயிலைவாசனின் தொகுப்புரையும் இடம்பெறவுள்ளன. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கிணைப்புக்கூட்டங்களில் பயமுறுத்தி

# அதிகாரிகளை நோயாளிகளாக்காதீர்!

## மருத்துவர் சத்தியமூர்த்தி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

'கூட்டங்களுக்கு அழைத்தால் அதிகாரிகள் கண்ணியமாக நடத்தப்படவேண்டும். மாறாக கூட்டங்களில் கலந்து கொள்பவர்களைப் பயமுறுத்தி, அவர்களை நோயாளிகளாக மாற்றாதீர்கள்' என்று யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இணைத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதன்போதே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் எதனையும் எடுக்கவிடாமல், அர்ச்சுனா எம்.பி. அதிகாரிகளை உரத்ததொனியில் அதட்டி உருட்டி கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். அதன் பின்னரே யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரிகளைக் கூட்டங்களுக்கு அழைத்தால் கண்ணியமாக நடத்த வேண்டும். கூட்டத்துக்கு வந்து கத்துவதால் எதுவும் நடக்கப்போவதில்லை. இவ்வாறு பதற்றமாக்குவதால் கூட்டத்துக்கு வருவாருக்கு இரத்த அழுத்தமே அதிகரிக்கின்றது. இதனால் பக்கவாதம் கூட ஏற்படலாம். கூட்டத்தில் கலந்து கொள்பவர்களை நோயாளிகளாக மாற்றவேண்டாம். எம்மை பதிலளிக்கவிடாமல் உரத்துச் சத்தம் போடுவது அபிவிருத்தியைக் கொண்டுவராது. இவ்வாறான செயற்பாடுகள் எம்மைப் போன்றவர்களைப் பணியாற்ற விடாது, இப்படியான நிலையில் இருந்து எம்மைப் பாதுகாக்கத்தான் முற்படுவோமே தவிர பணிகளைச் செய்யும் மனநிலையை இல்லாமலாக்கிவிடக்கூடும். கூட்டங்களுக்கு அடுத்த முறை நாம் வருவதாக இருந்தால் இணைத்தலைவர் இந்தப்பிரச்சினைக்கு முடிவுகாணவேண்டும் - என்றார்.

போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் தனது கருத்துகளைத் தெரிவித்துக்கொண்டிருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இரு தடவைகள் குறுக்கிட்டு உரத்த குரலில், "கேள்விகள் கேட்டால் பக்கவாதம் மட்டுமல்ல மாரடைப்பும் வரும், ஆனால் கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்போம் "என்று தெரிவித்தார்.

இணைத்தலைவரும் அமைச்சருமான இ.சந்திரசேகர் அவரைக் கட்டுப்படுத்தி, போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் தனது கருத்தைத் தொடர்ந்து தெரிவிக்க வழியேற்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-26)

# சரிவடையும் பிறப்பு வீதம்!

கொழும்பு, ஜூலை 18

இலங்கையில் பிறப்புவீதம் குறைந்துள்ளது என்று தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம், இலங்கையின் தற்போதைய பிறப்புவீதம் 1.9 ஆக உள்ளது என்றும், இந்த எண்ணிக்கை 2.1 ஆக இருக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை இளைஞர்களுடனான கலந்துரையாடல்களில், பங்கேற்றவர்களில் பெரும்பாலானோர் ஒரு குடும்பத்தைத் தொடங்க விரும்புகின்றனர் என்று கூறினர் என்றும், ஆனால் பொருளாதார சிக்கல்கள் இதற்கு தடையாக உள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தின் பிரதிநிதி கூலி அடெனியி, கடந்த சில ஆண்டுகளில் இலங்கையில் வாழ்க்கைச் செலவு இரட்டிப்பாகியுள்ளது. அதனால் வீட்டுவசதி மற்றும் உணவுக்கான செலவும் அதிகரித்துள்ளது. இந்த நிலைமையால் ஒரு குடும்பத்தைத் தொடங்கநினைத்த இளைஞர்கள் அதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். (எ-இ)


சாவகச்சேரி நகராட்சி மன்றம்
பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ்
சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட
கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க மீள்கேள்வி மனு கோரலுக்கான அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 18.07.2025 தொடக்கம் 31.07.2025 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 01.08.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 01.08.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.

**கேள்விஅட்டவணை**

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள். தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/06 | ரூபா 10,149,300.00 | ரூபா 9,000.00 | ரூபா 152,239.50 | ரூபா. 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும், சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "தவிசாளர், நகரசபை, சாவகச்சேரி எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் , யாழ்ப்பாணம் " என்ற முகவரிக்கு 01.08.2025ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்ப படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்படுடன் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது..
8. சித்திர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுவர் கேள்வித்தொகையை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபையின் தவிசாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

18.07.2025

(CR/45543) J-1



**வேலை வாய்ப்பு**

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு.
ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்

தொடர்புகளுக்கு 076 151 7481
077 494 9683



**ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2025**

யா/ ட்ரிபேக் கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு - பிரேரணைகள் இருப்பின் 25.07.2025 இற்கு முன் OBA அலுவலகத்தில் ஒப்படைக்கவும்
தொடர்புகளுக்கு - 076 895 5636

திரு. ம.ஸ்ரீபாஸ்கரன்
செயலாளர்

யா/ ட்ரிபேக் கல்லூரி
பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்.



**குமாரகோவிற் பொதுக்கூட்டம்**

20.07.2025 அன்று நடைபெறவிருந்த மாவிட்டபுரம் குமாரகோவில் தருமபரிபாலன சபைப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் 03.08.2025 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. 03.08.2025 அன்று காலை 09.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் கூட்டம் நடைபெறும்.

தருமபரிபாலன சபையினர்
குமாரகோவில்.



**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

**கணித பாட ஆசிரியர் பணி வெற்றிடம்**

எமது சங்கத்தின் பராமரிப்பின் கீழ் இயங்கும் சிறுவர் இல்லங்களில் தங்கியிருக்கும் சிறார்களுக்குக் கணித பாட (தரம் 06 தொடக்கம் தரம் 08 வரை) பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவதற்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உங்கள் சுய விபரக்கோவையினை 25.07.2025 இற்கு முன்பாகத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

செயலாளர்
சைவ வித்தியா விருத்திச்சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி - 021 222 6525, 076 300 4877


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகரசபை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள் கேள்வி அறிவித்தல் -2025

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களுக்கான கட்டணத்தையும் வைப்பையும் மாநகர சபையின் முன்னரங்க பகுதியில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் :- **ரூபா 1,000.00 + Vat 18%**
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- **18.07.2025 தொடக்கம் 26.07.2025 வரை (ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணி வரை)**
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- **28.07.2025 முற்பகல் 10.00 மணி வரை**
- கேள்விப்படிவம் திறத்தல் :- **28.07.2025 முற்பகல் 10.00 மணிக்கு**
- கேள்விப்படிவம் திறக்கும் இடம் :- **மாநகர சபை திட்டமிடல் மண்டபம்**
- மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் :- **ஆரம்ப கேள்வித் தொகையின் 2% அல்லது ரூபா 2,000.00 இத் தொகைகளில் கூடிய தொகை**

- விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் **28.07.2025 முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.
- கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமூகமளித்தல் வேண்டும்.
- கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்கள் சித்தி பெற்ற சகல கடைகளுக்குமான இடத்திற்குரிய கேள்வித் தொகையினையும் அதற்கான 18% Vat இனையும் **01.08.2025ம் திகதி 2.30** மணிக்கு முன்னர் முன்னரங்கப் பகுதியில் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட கடைகளிற்கான இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். தவறும் சந்தர்ப்பத்தில் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட சகல விண்ணப்பங்களும் இரத்துச்செய்யப்படுவதுடன் மீளளிக்ககூடிய வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
- **கேள்விகோரலில் சித்தியடைந்தோர் 01.08.2025ம் திகதி 2.30 மணிக்கு முன்னர் கேள்வித் தொகையினைச் செலுத்தத் தவறிய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.**
- மீளளிக்கக் கூடிய வைப்புப் பணத்தை மீளளிக்க ஏதுவாக வைப்புதாரரின் வங்கி கணக்கு புத்தக பிரதி (பெயர், கணக்கிலக்கம், வங்கி விபரம் உள்ளடங்கிய பக்கம் இணைக்கப்படவேண்டும்.
- 30.11.2025ம் திகதிக்கு முன் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து மீள பெற்றுக்கொள்ளாத மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் சபை வருமானமாக மாற்றப்படும்.
- மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.
- கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**வி.மதிவதனி**
**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**


# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த நிலையில் கைதுசெய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் மாவட்ட நீதவான் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூன் 29ஆம் திகதியும், இம்மாதம் முதலாம் திகதியும், இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்திருந்தனர். அவர்களின் இரு இழுவைப்படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன. குறித்த மீனவர்களையும், இழுவைப்படகுகளையும் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியிருந்தனர். அதன்போது அத்துமீறிய 15 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது 15 இந்திய மீனவர்களினதும் விளக்கமறியலை இம்மாதம் 31 ஆம் திகதிவரை நீடிக்கும் உத்தரவை நீதவான் பிறப்பித்தார்.

(அ-35-56)


## DISTRICT SECRETARIAT, JAFFNA INVITATION FOR BIDS – (IFB-01)

Department Procurement Committee of Jaffna District Secretariat called bids by IFB 01 for Construction of Panaveddy Drainage Canal for Panaveddy Road 1st Culvert to 2nd Culvert & Waiting Canopy for Proposed Passport Office at District Secretariat Premises, Jaffna Please see the above mentioned Invitation for Bids (IFB-01) in Daily News dated 18.07.2025 or on Jaffna District Secretariat website
**www.jaffna.dist.gov.lk**

**Chairman,**
**Department Procurement Committee,**
**District Secretariat,**
**Jaffna**

(CR/45541) J-1





மிருசுவில் படித்த மகளிர் திட்டம் "துர்க்காபுரம்"

## அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான ஆடிப்பூர அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் -2025

திருச்சிற்றம்பலம்
"ஆதிபரமேஸ்வரியே ஆனைமுகன் தாயாரே
வேதமெல்லாம் போற்றுகின்ற வீரசிங்க வாகினியே
ஆதரவாய் உன்னைப்பாடும் அருளெமக்குத் தந்திடம்மா
நாதமிகு மிருசுவில் வாழ் ஞானதுர்க்கை அம்பிகையே"
திருச்சிற்றம்பலம்

ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!

தன்னை நம்பி வழிபடும் அடியார்களை காலந்தோறும் பாதுகாத்து நல்லருள் பாலித்து மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் "துர்க்காபுரம்" என்னும் ஸ்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனுக்கு விசுவாசுவ வருடம் பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெற எல்லாம் வல்ல அம்பிகை திருவருள் ஈர்ந்துள்ளார்.

ஆடி மாதம் 03ம் நாள் ( 19.07.2025) சனிக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 10ம் நாள் ( 26.07.2025 ) சனிக்கிழமை சப்பரம், வேட்டைத்திருவிழா (27.07.2025) ஆடி மாதம் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை தேர் ஆடி மாதம் 12ம்நாள் ( 28.07.2025) திங்கட்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெரும். (27.07.2025) தேர்த்திருவிழா அன்று ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின்மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும். தினமும் காலை 10.00 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூஜை, வசந்தமண்டப பூஜை, அம்பாள் வீதியுலாவும்,மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) இடம் பெறும்.

**ஆலய தர்மகர்த்தா**
**சி. நவரத்தினம் மனோன்மணி அம்மா**
**விழா உபயகாரர்கள்.**

**"துர்க்காபுரம்"**
**படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.**

(CS/53830) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ந்து சென்ற பேருந்து வயலுக்குள் கவிழ்ந்தது!

## பயணிகள் அருந்தப்பு; அராலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

பயணிகளை ஏற்றிக்கொண்டு 10 15 கிலோமீற்றர் வேகத்தில் சென்ற பேருந்தொன்று திடீரென்று வீதியின் வலதுபுறமாகச் சென்று அருகிலுள்ள வயலுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் யாழ். அராலியில் வட்டுக்கோட்டை சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று மதியம் நடந்துள்ளது.



தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் 789 வழித்தடப் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது. இதன்போது பயணிகள் எவருக்கும் எந்தவிதமான உயிராபத்தோ, காயங்களோ ஏற்படாமல் தப்பினர். இந்த விபத்துத் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ச-27)

# கெஹலிய குடும்பம் மீது குற்றப்பத்திரிகை

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் மருமகனுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

97 மில்லியன் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள சொத்துகளை சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றச்சாட் டின்பேரில் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் இந்தக் குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)


# மரண அறிவித்தல்

பூவுலகில்
07 . 04 . 1966



கர்த்தரின் மகிமைக்குள்
14 . 07 . 2025

## போதகர் A.C.கிறிஸ்ரோப்பர் (அலன்)

கொழும்பு கிருளப்பனையை பிறப்பிடமாகவும், உடுவில், கொக்குவில் மற்றும் தற்போது வத்தளை கொழும்பினை வசிப்பிடமாகவும் கொண்ட போதகர் A.C கிறிஸ்ரோப்பர் (அலன்) அவர்கள் 14.07.2025 திங்கட்கிழமை கொழும்பில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான Rev. அல்பேட் அன்ரனி - புஸ்பமலர் (பட்டு) தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், மேகலா (ஆஷா) அவர்களின் பாசமிகு கணவரும், சதாசிவம் - சந்திரா தம்பதியினரின் மருமகனும், யூலியா (சுவிஸ்), யூடா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஜெனிபனின் (சுவிஸ்) மாமனாரும், யாதோனின் பாசமிகு பேரனும், A.M ஏஞ்சலினா (சுகந்தி) (இத்தாலி), கிறேஸ் மேரிகிறிசில்டா (நீனா) (UK), வதனிவேர்ஜினியா (சுவிஸ்), ஜொலி றொபின்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், ரட்ணராசா (இத்தாலி), செல்வராசா (UK), சசிகரன் (சசி) (சுவிஸ்), பரீனா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், கெலனா (UK), (செருபாபேல், சாமுவேல்) (UK), (ஷாரோன், அபிஷா, ஜெருஷா) (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், (சாரா ஜொய்ஸ், யோசுவா, யோனாஸ்) (சுவிஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், பூமணி மேரிதிரேசா சூசைப்பிள்ளை அவர்களின் பெறாமகனும், தம்பு பாலசுப்பிரமணியம் (சுண்டுக்குளி), தம்பு மகாதேவா (உடுவில்) ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 18.07.2025 வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு இல.89, பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள கல்வாரி பூரண சுவிஷேச தேவாலயத்தில் நடைபெற்று, கல்வாரித்தோட்டம், தாவடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
வதனிவேர்ஜினியா: 0041774525999
ஜொலி: 077 881 8271 / 0041779148090
யூடா: 077 174 2570
எட்வேட் றெஜினோல்ட்: 075 931 8675

தகவல்:
குடும்பத்தினர்



# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
23 . 03 . 1943



மறைவு
19 . 06 . 2025

கடந்த 19.06.2025 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா கனகசபை

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 19.07.2025 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பகல் 11.00 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

த.மு: 125, பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
நி.மு: மீசாலை வடக்கு, மீசாலை

குடும்பத்தினர்


# சிவப்பு எச்சரிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை காரணமாக கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதன்படி, காலி முதல் மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலான கடற்பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளதாகவும் அடுத்த 24 மணி நேரத்துக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் எனவும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)


# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 09 . 1940



மறைவு
13 . 07 . 2025

## கனகசபை முதலி தியாகராஜா

நல்லூர் ராஜவீதியைப் பிறப்பிடமாகவும், நல்லூர், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை முதலி தியாகராஜா கடந்த (13.07.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை முதலி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவானியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜா, சிவராஜா ஆகியோரின் சகோதரரும், வத்சலா, வனிதா, வாசுகி, நிஷங்கன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேந்திரன், ஜெயக்குமார், தயாளன், லவீனா ஆகியோரின் அன்பு மாமனாரும், சேரன், தாரிணி, வர்ஷினி, தஷ்வினி, சங்கீத் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சதா, சத்தியமூர்த்தி, சத்தியநாதன், சத்தியபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2025) வெள்ளிக்கிழமை கோப்பாய் தெற்கு, கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10:00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(CS/58886) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் இறுதிநாளான வைரவர் உற்சவத்தின்போது வைரவப் பெருமானுக்கு பொங்கல் பொங்கி மடைபரவி பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர். (ச-17)

# அநுர அரசு பெயில் ஐ.ம.ச. விமர்சனம்!

கொழும்பு, ஜூலை 18

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், எல்லாத் துறைகளிலும் 'பெயில்' என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி விமர்சித்துள்ளது.**

இதுதொடர்பாக அந்தக் கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளதாவது:-

அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள வரிகளைக் குறைத்துக்கொள்வதற்குரிய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் தெளிவு இல்லை.

30 சதவீத வரியென்பது பாரதூரமானதாகும். இலங்கைக்குப் போட்டியாகவுள்ள வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ்க்கு இலங்கையைவிடக் குறைந்தளவான வரியே விதிக்கப்பட்டுள்ளது. இது ஆடை உற்பத்தித் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தியாவுக்கும் குறைந்தளவு வரி விதிக்கப்பட்டால் அதுவும் தாக்கமாகவே அமையும்.

இலங்கையால் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுத்தொடர்பில் எமக்கு சந்தேகம் உள்ளது.

விரைவில் சாதகமான பதில் கிட்டும் என ஆட்சியாளர்கள் ஆரம்பத்தில் அறிவித்தார்கள். ஆனால் நல்ல செய்தி வரவில்லை. 30 சதவீத வரி என்ற துயரச் செய்தியே வந்தது.

இந்த அரசாங்கத்திடம் வேலைத்திட்டம் மற்றும் முகாமைத்துவம் இல்லை.

வழிநடத்தத் திறமையான அணியும் இல்லை. இராஜதந்திர அனுபவமும் கிடையாது. அனுபவமுள்ள மஹிந்த சமரசிங்க அமெரிக்கத் தூதுவராக இருப்பதாலேயே வரி 30 சதவீதமாக குறைக்கப்பட்டது. மஹிந்த சமரசிங்க கூட கோத்தா ஆட்சியில் நியமிக்கப்பட்டவர் - என்றார். (எ-44)

## குற்றமற்றவரை தண்டிக்கிறது அரசு

*ராஜித மகன் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 18

ஊழல், மோசடிகளுக்கு எதிராக எனது தந்தை தொடர்ச்சியாகப் போராடிவருகின்றார். எனவே, வரலாறு அவரை நிச்சயம் விடுதலை செய்யும் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மகன் சதுர சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தன்னைக் கைதுசெய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன சார்பில் கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்பிணை கோரி அண்மையில் மனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

1994 இல் இலஞ்ச, ஊழல் தடுப்புச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு ஆதரவாக எனது தந்தை செயற்பட்டார். 2015 நல்லாட்சியின் போதும் ஊழல், மோசடிகளுக்கு எதிராக நான், எனது தந்தை உள்ளிட்டவர்கள் குரல் கொடுத்தோம். சந்திரிக்கா ஆட்சியில் ராஜிதவுக்கு வழக்குத் தொடுக்கப்பட்டது. அவர் குற்றமற்றவர் என்பது நிரூபணமானது. அது சோடிக்கப்பட்ட வழக்கு எனவும் கூறப்பட்டது. வெள்ளை வாகன வழக்கிலும் அவர் விடுதலையானார். எனவே, வரலாறு ராஜித சேனாரத்னவை நிச்சயம் விடுதலை செய்யும். இந்த அரசாங்கத்தை எப்படியும் கவிழ்ப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## இந்தியா வசமாகவுள்ள இலங்கையர் தரவுகள்!

*விமல் வீரவன்ஸ கவலை*

கொழும்பு, ஜூலை 18.

இலங்கையின் மின்னணு தேசிய அடையாளஅட்டை அமைப்பை உருவாக்குவதற்கான கேள்விப்பத்திரத்தை, அரசாங்கம் இந்திய நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இது தேசிய தரவுப் பாதுகாப்புத் தொடர்பான கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் காரணமாக, கைரேகைகள், விழித்திரை ஸ்கான் மற்றும் குடியிருப்பு விவரங்கள் போன்ற முக்கியமான தகவல்கள் உட்பட இலங்கைக் குடிமக்களின் மிகவும் உணர்திறன் வாய்ந்த தனிப்பட்ட தரவுகளை இந்திய நிறுவனத்தால் அறிந்துகொள்ளமுடியும்.

உள்நாட்டிலேயே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் 99 சதவீத தொழில்நுட்ப அமைப்புகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எனினும், தற்போதைய நிர்வாகம் வேண்டுமென்றே உள்நாட்டு அமைப்பை ஓரங்கட்டி, இந்தியாவின் தேசிய ஸ்மார்ட் நிறுவனத்துக்கு இந்தப் பணியை வழங்கியுள்ளது - என்றார். (எ-இ)

## பாதுகாப்புச் செயலர் பதவி வேண்டாம்

*சரத் பொன்சேகா தெரிவிப்பு*



கொழும்பு, ஜூலை 18

தற்போதைய அரசாங்கத்தில் எனக்குப் பாதுகாப்புச் செயலாளர் பதவி வழங்கப்பட்டாலும் அதை ஏற்கமாட்டேன். அந்தப் பதவியால் எந்தவொரு பெரிய மாற்றத்தையும் செய்யமுடியாது என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் கபினட் அமைச்சராக இருந்தவன், பீல்ட் மார்ஷல் என்பது இங்கிலாந்து போன்ற நாடுகளில் அமைச்சர்களைவிட உயர்பதவி. இங்கு அப்படி இல்லை.

நான் பாதுகாப்புச் செயலாளர் பதவியை ஏற்றால் இங்குள்ள பிரதி அமைச்சர்களுக்கும் "சேர், சேர்.." என்று சொல்லிக்கொண்டு இருக்கவேண்டிவரும். அதனால் பாதுகாப்புச் செயலாளர் பதவி வகிப்பதென்பது சாத்தியமற்றது.

மஹிந்த ராஜபக்ச அப்போது எனக்கு மூன்று செயலாளர் பதவிகள் தருவதற்குத் தயாராக இருந்தார். நான் ஏற்கவில்லை.

மாற்றம் செய்யவேண்டும் என்றால் களத்தில் இறங்க வேண்டும். கதிரையில் இருந்துகொண்டு ஆலோசனை வழங்கிக்கொண்டு செயற்படுவதன்மூலம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தமுடியாது - என்றார். (எ-75)



## தேசிய மக்கள் சக்தியால் மஹிந்தவுக்கு ஏறும் மவுசு

*ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 18

தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளால் மஹிந்த ராஜபக்சவுக்கான மவுசு ஏறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அன்றும், இன்றும், என்றும் எனது அரசியற்தலைவர் மஹிந்த ராஜபக்சதான். சிலிண்டரில் நான் வாக்குக்கேட்ட வேளையிலும் இதைப் பகிரங்கமாக குறிப்பிட்டிருந்தேன். மஹிந்த போன்றதொரு அரசியற்தலைவர் மீள உருவாகப்போவதில்லை. தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளால் மஹிந்தவுக்குரிய பெறுமதி அதிகரித்துள்ளது.

எமது ஆட்சி இருந்திருந்தால் மஹிந்தவைக் கிழட்டு மைனா எனவும், நாமலைக் குட்டி மைனா எனவும் தேசிய மக்கள்சக்தியினர் விமர்சித்திருப்பார்கள்.

அன்று எம்மை இப்படி விமர்சித்தவர்களுக்கு மக்கள் இன்று சமூகவலைத் தளங்களில் சிறப்பான பதிவுகளைப் பதிவிட்டுவருகின்றனர். இப்போது மஹிந்தம் புரிந்திருக்கும் - என்றார். (எ-44)

### செம்மணி மனிதப்புதைகுழி

## சர்வதேச நீதியை வலியுறுத்தி சென்னையில் கருத்தரங்கு!

சென்னை, ஜூலை 18

செம்மணி மனிதப்புதைகுழிக்கு நீதிகோரி பொதுவாக்கெடுப்புடன் கூடிய சர்வதேச நீதி விசாரணைவேண்டும் என்பதனை வலியுறுத்தி சென்னையில் மாபெரும் கருத்தரங்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு நடத்தப்படவுள்ள இந்தக் கருத்தரங்கு சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள சர்.பிடி.தியாகராயர் கலையரங்கத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளணி...

எனவே விரைவில் தொழினுட்ப உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சில ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படும் என வடக்கு மாகாண ஆளுநரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். வடக்கு மாகாணத்துக்கு கடந்த ஆண்டுகளைவிட 3 மடங்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை விரைந்து - வினைத்திறனாக செலவு செய்து முடிக்கவேண்டும். எமக்கு ஒதுக்கப்பட்ட நிதி நூறு வீதமும் இந்த ஆண்டு இறுதிக்குள் செலவு செய்து முடிக்கப்படும். அதேநேரம் இதன் விளைவுகளையும் நாம் மதிப்பீடு செய்யவேண்டும். மக்களுக்கு இதனால் எவ்வாறான பயன்கள் ஏற்பட்டன என்பது தொடர்பிலும் ஆராயவேண்டும்.

அதேநேரம், அடுத்த ஆண்டுக்கான திட்டங்களையும் இப்போதே தெரிவு செய்து முன்னுரிமை அடிப்படையில் இறுதிப்படுத்த வேண்டும். அபிவிருத்திப் பணிகள் சமச்சீராகக் கிடைக்கப்பெறுவதை பிரதேச செயலர்கள் உறுதிப்படுத்தவேண்டும், என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். (அ-26)

## மூளையில்...

காய்ச்சல் என மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குடும்பப் பெண்ணொருவர் தலையில் சத்திரசிகிச்சை மேற்கொண்ட நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியைச் சேர்ந்த கணேஸ்வரன் திகழ்மதி (வயது-45) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணுக்கு கடந்த 14ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதால், அவர் அச்சுவேலி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அன்றையதினமே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்போது அவருக்கு மூளையில் இரத்தக் கட்டி உள்ள விடயம் தெரியவந்தது. இந்த நிலையில் அவருக்கு 15ஆம் திகதி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-26-27)

## செம்மணி...

ஆனால், அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை என்று சிவில், சமூக செயற்பாட்டாளரான ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"செம்மணி மனிதப்புதைகுழியில் பாரதூரமான குற்றமே நடந்துள்ளது. அதேபோல இலங்கையில் இதுவரையில் இப்படியான 22 மனிதப்புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எனினும், இவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மனிதப் புதைகுழிகள் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றுமா என்பது தெரியவில்லை. உரிய வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. எனவே, இனியும் அரசாங்கம் பதுங்கக்கூடாது.

செம்மணிப் புதைகுழி உட்பட புதைகுழி விவகாரத்துக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். உயிரிழந்த மக்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும்" - என்றார். (அ-44)

## அமைச்சரும்...

குறித்த விகாரைக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதென வலி.வடக்கு பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இந்தச் சந்திப்பு நேற்று மாலை நடைபெற்றுள்ளது.

இதற்கு முன்னரும் விகாராதிபதியை கடற்றொழில் அமைச்சர், சந்தித்துப் பேச்சுகளை நடத்தியிருந்தார் என்றும், நேற்று அதன் தொடர்ச்சியாகவே இரண்டாம் கட்டப் பேச்சுகள் இடம்பெற்றன என்றும் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பு நடந்துகொண்டிருந்த போது, சட்டநடவடிக்கைக்கான பூர்வாங்கப் பணிகளுக்காக வலி.வடக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் விகாரைப்பகுதிக்குச் சென்றிருந்தனர். அவர்கள் மூலமே இந்த இரகசியச் சந்திப்புவிடயம் 'சந்திக்கு' வந்தது. எனினும் இந்தப் பேச்சுகளின் போது பரிமாறப்பட்ட விடயங்கள் தொடர்பிலான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை. (அ-26)

## இரணைமடுக்...

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளில் இடம்பெற்றுள்ளது.

சாந்தபுரத்தைச் சேர்ந்த பிச்சை துரைராசா (வயது-64) என்பவரே நீரில் மூழ்கி உயிரிழந்த மீனவராவார். இவர் மீன் பிடிப்பதற்காக கட்டுமரத்தில் நின்றபடி வலையை வீசியபோது, நிலைதடுமாறி தண்ணீருக்குள் வீழ்ந்துள்ளார். நீண்ட நேரமாக கட்டுமரமொன்று ஆளில்லாமல் நிற்பதை அவதானித்த சகமீனவர்கள், நடந்த விபரீதத்தை ஊகித்து நீரில் மூழ்கியவரைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். நீண்ட தேடலுக்குப் பின்னர் அவர்களால் குறித்த மீனவரின் சடலத்தையே மீட்கமுடிந்தது. சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப் பொலிஸார் இதுதொடர்பான விசாரணகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-113)

## புதைகுழிகளுக்கு...

சிவில் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து நீதிக்கான மக்கள் சக்தி எனும் கூட்டணியாக போராட்டத்துக்குரிய ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

அருட்தந்தை மா. சக்திவேல், ஜோசப் ஸ்டாலின் உட்பட மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும், பொதுமக்களும் எனப் பலர் போராட்டத்தில் பங்கேற்று, நீதிக்காக குரல் எழுப்பினார்கள்.

'புத்த தேசமா? புதைகுழிகள் தேசமா? செம்மணியில் எலும்புகளாக எம்மவர்கள் சர்வதேசமே தமிழர்களை ஏமாற்றாதே..! யுத்தக் குற்றத்தின் சாட்சி செம்மணி, வடக்கு - கிழக்கில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து" போன்ற பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேபோல தென்னிலங்கையில் அடையாளம்காணப்பட்ட மனிதப்புதைகுழிகள் மற்றும் பட்டலந்த வதை முகாம் தொடர்பிலும் நீதி கோரப்பட்டது. கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து, ஜனாதிபதி செயலகம் நோக்கி போராட்டக்காரர்கள் செல்ல முற்பட்டபோது, அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதன்போது பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் போராட்டம் நடந்த இடத்துக்கு வருகை தந்திருந்தார். அவருடன் வந்தனர் எனக் கூறப்படும் இருவர், போராட்டத்தை ஏற்பாடு செய்த தம்முடன் முரண்பட்டதாக ஏற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார். (அ-44)

## பிரத்தியேக...

வத்தினர் ஆடிப்பிறப்பான நேற்று வியாழக்கிழமை முதல் அனுமதி வழங்கியுள்ளனர்.

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்கு கட்டுப்பாடுகள் இன்றி மக்கள் வழிபடுவதற்கான அனுமதியை 35 வருடங்களின் பின்னர், ஜூன் மாதம் 27ஆம் திகதி இராணுவத்தினர் வழங்கியிருந்தனர். ஆனால் ஜூன் மாதம் 28 ஆம் திகதி பாதுகாப்புக் காரணங்கள் எனக் கூறி ஆலயத்திற்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலே நேற்று முதல் ஆலயத்திற்குச் செல்ல மீண்டும் அனுமதி வழங்கப்படுவதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

35 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள குறித்த ஆலயத்துக்கு கடந்த ஆறுமாத காலத்துக்கு முதலே சுதந்திரமாக சென்று வழிபட அனுமதி வழங்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்திருந்த போதிலும் அது நடைமுறைக்கு வரவில்லை. விசேட தினங்களில் மாத்திரம் கடுமையான கட்டுப்பாடுகளுடன், ஆலயத்துக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில், 'ஆலயத்துக்கு மாத்திரம் செல்வதற்கு' என உயர்பாதுகாப்பு வலயத்தினுள் பிரத்தியேக பாதை அமைக்கப்பட்டு, அந்தப்பாதை ஊடாக மக்கள் ஆலயத்துக்கு மாத்திரம் சென்று வழிபட்டு திரும்ப இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஆலயத்துக்குச் செல்வதற்காக அந்தப் பகுதி மக்கள் தமது சொந்த நிதியிலேயே குறித்த பிரத்தியேகப் பாதையை அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-26)

## மீண்டும்...

அமர்வு தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே பசுமைப்பூங்காவின் பெயரை 'சந்திரன் பூங்கா' என மாற்றும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2009க்கு முன்னர்வரை குறித்த பூங்கா 'சந்திரன் பூங்கா' என்றே அறியப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (அ-113)

## 'இதுதான்...

'யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி குறைந்தளவான நேரமே பேசப்பட்டுள்ளது. அரச அதிகாரிகளை திட்டமிட்டு அவமரியாதை செய்தால் அது நேரடியாக அபிவிருத்திப் பணிகளையே பாதிக்கும். ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தனிநபர்கள் படம் காட்டுகின்ற கடைசிக் கூட்டம் இதுவாகவே இருக்கும்.

குழப்பத்தில் ஈடுபடுபவர்கள் கூட்டங்களுக்கு வராவிட்டாலும் பரவாயில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான குழப்பம் விளைவிக்கும் செயற்பாடுகளுக்கு இடமிருக்காது' - என்றார். (அ-44)

## ஒருங்கிணைப்புக்...

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இ.சந்திரசேகர், இணைத் தலைவரான வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ் மாவட்ட செயலாளர் ம.பிரதீபன் ஆகியோரின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்றது. அப்போது ஒருகட்டத்தில், 'யாழ். மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற மணல் கடத்தலின்போது கைப்பற்றப்பட்ட வாகனத்தை விடுவிக்க யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் பணித்ததாக நான் அறிந்தேன்' என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் குற்றஞ்சாட்டினார். இதனை மறுதலித்த மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், 'ஆதாரம் இல்லாமல் பொதுவெளியில் இவ்வாறு கதைக்கக் கூடாது. நான் அவ்வாறு எதுவிதமான செயலிலும் ஈடுபடவில்லை' - என்றார்.

இதனையடுத்து ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான கருணைநாதன் இளங்குமரன், 'இங்குள்ள பலர் பக்கச்சார்பாக நடக்கின்றனர். இதனால் பல பிரதேச செயலாளர்களும், நிர்வாக அதிகாரிகளும் பழிவாங்கப்படுகின்றனர். அந்தப் பழிவாங்கலால் திட்டமிட்ட இடமாற்றங்களுக்கும் உட்படுகின்றனர்' எனக் குற்றஞ்சாட்டினார்.

அதனை ஆமோதித்த அர்ச்சுனா எம்.பி. "யாழ்.மாவட்டச் செயலரின் பழிவாங்கலால் தாம் பாதிக்கப்பட்டுள்ளனரென எட்டு பிரதேச செயலாளர்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்" - என்றார். அதனைத் தொடர்ந்து ஆளும்கட்சி எம்.பி.க்களான பவானந்தராஜா, இளங்குமரன் ஆகியோர் மாவட்டச்செயலர் மீது சரமாரியான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அத்துடன், பிரதேச செயலாளர்களின் இடமாற்றங்களை இரத்துச் செய்து, வடக்கு ஆளுநர் தலைமையில் குழு அமைத்து இடமாற்றங்களை தீர்மானிக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது. எனினும் முடிவேதுமின்றி கூட்டம் அவசர அவசரமாக முடிவுறுத்தப்பட்டது. (அ-26)

## ரயிலில்...

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு நேற்றுமுன்தினம் இரவு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தீவகத்தைச் சேர்ந்த கணேசு சௌந்தர்ராஜன் (வயது-65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு, வவுனியா மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.10 ஏக்கராகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1



"கல்வியுலகில் கலங்கரை விளக்கு"

## NEC

மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம், யாழ்.நகரில் அனுபவம் மிக்க விசேட ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில்...

A/L 2027 கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 19.07.2025 சனி காலை 08.00 AM

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 076 535 0999



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 864 9878



## A/L வரலாறு

- 2K27 புதிய பிரிவுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- 2K26 பிரிவுக்கு புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

மாவட்ட மற்றும் தேசிய சாதனை படைத்த மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர்.

M. பத்மன் [B.A(Hons) Hostory, P.G.D.E, Dip.in.psy, M.A(Hons) Hostory, M.E.D (OUSL)]

கற்பிக்கும் இடங்கள்: DMI ஆரியகுளம். யாழ்ப்பாணம் | Bitsman மானிப்பாய் | High College குளப்பிட்டி கொக்குவில்

தொடர்புகளுக்கு - 077 482 5587




## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

மாணவர்களிடையே சமய அறிவையும் ஒழுக்கநெறியையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவிலின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப்போட்டிக்கான பரிசளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை ஆலய முன்றலில் இடம்பெற்றது. (ச-41-27)

# காவுவாங்கும் வல்லைப்பாலம்

### தவிசாளர் நிரோஷ் சுட்டிக்காட்டு

வல்லைப்பாலம் பழுதடைந்து பல உயிர்களைக் காவுவாங்கியிருக்கின்றது. எனவே, இதற்கு என்ன தீர்வு? என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா நிரோஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலிகாமம் கிழக்கின் எல்லைப் பகுதியில் அமைந்திருக்கும் வல்லைப் பாலம் மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது. ஆறுக்கும் மேற்பட்ட உயிர்கள் அண்மைக்காலத்தில் பறிபோயுள்ளன. அத்துடன், காயங்களை ஏற்படுத்திய, வாகனங்கள் சேதமடைந்து பல விபத்துகளும் அண்மையில் இடம்பெற்றுள்ளன. வல்லைப் பாலம் மேலும்மேலும் ஆபத்தானதாக மாறிவரும் நிலையில், அதைச் சீரமைப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

இதற்குப் பதில் வழங்கிய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரன், வல்லைப் பாலம் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் வரவுசெலவுத்திட்டத்தில் அதற்குரிய நிதி ஒதுக்கப்படும் என்றார். இதையடுத்து, வல்லைப் பாலத்தில் போதியளவு மின்விளக்குகள் இல்லை என்ற விடயத்தை இளங்குமரன் எம்.பி. சுட்டிக்காட்டினார். இதற்குப் பதில் வழங்கிய தவிசாளர், 'கடந்த காலங்களில் வல்லைப் பாலத்தில் போதியளவு மின் விளக்குகள் பூட்டப்பட்டன. எனினும், அவை காலப்போக்கில் திருடப்பட்டுவிட்டன. உடனடித் தேவை கருதி சில சோலர் விளக்குகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-26)

## விகாரைக்குள்...

குறித்த விகாரைமீது சட்டநடவடிக்கை எடுப்பதென வலி.வடக்குப் பிரதேசசபையால் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனையடுத்து சட்டநடவடிக்கை தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளுக்காக பிரதேசசபை உறுப்பினர்கள் தையிட்டி விகாரைக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தனர். அப்போதே விகாரைக்கு அருகேயுள்ள காணியொன்றில் புதிய கட்டுமானம் ஒன்றை அமைப்பதற்கான குழியொன்று வெட்டப்பட்டிருப்பதை அவர்கள் அவதானித்தனர். எனினும் விகாரையில் புதிய கட்டுமானம் அமைப்பதற்கான எந்தவொரு அனுமதிக்கோரிக்கையும் விகாராதிபதியால், வலி.வடக்கு பிரதேசசபையிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே இந்தப் புதிய குழி தொடர்பிலும் விகாராதிபதியிடம் பிரதேசசபை விளக்கம் கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-26)

## தையிட்டி...

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு பிரதேசசபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. இதன்போது, தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பில் பிரதேசசபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் தீர்மானம் ஒன்றை முன்வைத் தார். குறித்த தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வன்னியசிங்கம் பிரபாகரன் குறித்த வழக்கில் பிரதேசசபையின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாக வேண்டும் என தவிசாளரிடம் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்தார்.

இதற்குப் பதில் வழங்கிய தவிசாளர் குறித்த வழக்கில் பிரதேசசபையின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் இலவசமாகவே செய்வார் என சபையில் வாக்குறுதியை வழங்கினார். இதனையடுத்து சட்டநடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வலி.வடக்கு பிரதேசசபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-26)


## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 04 . 1966

மறைவு 14 . 07 . 2025



"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்". (2 தீமோ 4:7)

### வண A.C. கிறிஸ்ரோபர்

கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயத்தின் போதகரும், மூப்பரும், இலங்கை வேதாகமக் கல்லூரியின் விரிவுரையாளருமாகிய வண. A.C. கிறிஸ்ரோபர் அவர்கள் கடந்த (14.07.2025) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

போதகர் அவர்களது நல்லடக்க ஆராதனையானது இன்று (18.07.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம் இல. 89, பிறவுண் வீதி, கொக்குவிலில் நடைபெற்று, பின் பேழை நல்லடக்கத்திற்காக தாவடியில் உள்ள கல்வாரி தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
கல்வாரி குடும்பம்

(CS/58877) J-1



## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி யாழ்ப்பாணம். | K.K.S. வீதி சுன்னாகம் | BARATHY- சித்தன்கேணி

(எமது மூன்று நிறுவனங்களிலும்)

A/L 2027 கலை-வர்த்தகம்

புதிய பிரிவு ஆரம்பம்

19.07.2025 சனிக்கிழமை

புதிய அனுமதிகளை மூன்று நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

077 376 3511



## வேலையாட்கள் தேவை

K.K.S வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள மருதம் உணவகத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

077 747 4498


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org